மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

# திருவெம்பாவை

# திருவம்மானை

க. பொ. த. ப. (உயர்தர) பரீட்சைக்குரியது




உரையாசிரியர்:

வித்துவான் பொன். கந்தசாமி



ஸ்ரீ லங்கா வெளியீடு, யாழ்ப்பாணம்.

SRI Lanka Publish Jaffna

Miss. K. Semathinajah.
M.H.C

Miss. R. VATHANY

உ

சிவமயம்

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிய

# திருவெம்பாவை

# திருவம்மானை

க. பொ. த. ப. (உயர்தர) பரீட்சைக்குரியது

★

உரையாசிரியர்:

**வித்துவான் பொன். கந்தசாமி**

★

முதற் பதிப்பு 1975

உரிமை பதிப்பாளருக்கு]

[விலை ரூ: 2-50

உ

சிவமயம்

# முன்னுரை

சைவசித்தாந்தப் பெருநெறிக்குப் புகழ் நூலாகத் திருமுறைகள் திகழ்கின்றன; அவற்றைத் தோத்திரம் என்பர்; எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்துக்கு மெய் கண்ட தேவநாயனர் அருளிய சிவஞான போத நூலின் எட்டாவது நூற்பா இலக்கணமாக உடையது. தில்லைக்கூத்தப் பெருமான் திருவாதவூரடிகள் நேரில் அந்தணராய் எழுந்தருளிவந்து திருவாசகத் திருமறையினை எழுதியருளினர் என்றால், அதன் மகிமையை எம்மனோரால் உரைத்தற்கரியது;

திருவெம்பாவை பண்டைக்காலத்தில் பாவைநோன்பு இயற்றி வழிபட்டமுறையினையும், திருவம்மானை அக்காலத்து திருவாடல் முறையினையும் எடுத்துக் கூறுகின்றன. இத்திருவருட் பாடல்கள்; க. பொ; த. பூ (உயர்தர) பரீட்சைப் பாடத்திட்டத்திற்குரியன; மாணவர்கள் கற்பதற்கு இலகுவான தமிழ்மொழி நடையில் பொழிப்புரைகளும், விளக்கங்களும் எழுதப்பட்டுள்ளன; எனவே இந்நூலினை மாணவர்களும், ஆசிரியர்களும் மகிழ்ந்தேற்று ஆதரித்து நலனெய்துவார்களாக;

வித்துவான் பொன்; கந்தசாமி

உ
சிவமயம்

# திருவெம்பாவை

மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்துக்கு முன் பத்துத் தினங்களிலெல்லாம், கன்னிப் பெண்கள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பி நீராடச் செல்லும் பொழுது அப்பெண்களின் தன்மையைக் கண்டு அவர்கள் கூறிய கூற்ருக மாணிக்கவாசகர் திருவெம்பாவை என்னும் திருவாசகத்தைப் பாடியருளினுர். இது திருவண்ணுமலையில் நிகழ்ந்தது என்பர். திருவெம்பாவை எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்தின் ஒரு பகுதியாகும். "திருவெம்பாவை" இத்தொடர் திரு+எம்+பாவை எனப் பிரிந்து திரு–தெய்வத் தன்மை, எம்--உயிரின் தன்மை, பாவை—வழிபாட்டிற்குரிய பாவையின் திருவுருவத் தன்மை ஆகும். பராசத்தி ஆன்மாக்களுக்குத் திருவருள் சுரப்பதற்காகக் கன்னியர் செய்யும் விரதத்திற்குப் பாவைத் திருவுருவில் நின்று ஏற்று பலனளிக்கின்ருர் என்பர் ஞானியர்.

## பாவை நோன்பு

முற்காலந் தொடக்கம் சான்ருேர் மனந் தூய்மையடைய விரதங்கள் இருந்து இறைவனை வழிபட்டு வந்தனர். வழிபாடு காலகதியில் விழாவாக வளர்ச்சி பெற்றது. சான்ருேர் செய்த முறையைப் பின்பற்றிக் கன்னிப் பெண்கள் மார்கழி மாதத்தில் விடியற் காலையில் நீராடச் சென்று நீர்க்கரையில் ஈரமண்ணினுல் பாவை செய்து வழிபட்டு வருவதே பாவை நோன்பாகும். மார்கழி நீராடலை "தைந் நீராடுதல்" எனச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. கன்னியர் நல்ல மழை பெய்து நாடு செழிக்கவும், நல்ல கணவரைப் பெற்று இம்மை மறுமைப் பயனை எய்தவும் அருட் சத்தியை நினைந்து விரதம் இருப்பர். இடையர் குலப் பெண்களும் மார்கழி மாதத்தில் துயில் எழுந்து யமுனை நதிக்கரைக்குச் சென்று மண்ணுல் காத்தியாயனி உருவம் செய்து வழிபட்டு வந்தனர் என்பதனை ஆண்டாள் பாடியருளிய திருப்பாவையாலும் அறியக் கிடக்கின்றது.

# திருவெம்பாவை

## சத்தியை வியந்தது

திருச்சிற்றம்பலம்

**ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்**
**சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்**
**மாதே வளருதியோ வன்செவியோ** நின்செவிதான்
**மாதேவன் வார்கழல்கள்** வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி** மெய்ம்மறந்து
**போதார் அமளியின்மேல்** நின்றும் புரண்டிங்ஙன்
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள்** என்னேஎன்னே
**ஈதே எந்தோழி பரிசேலோர்** எம்பாவாய். (1)

**(பொ-ரை)** ஒளிபொருந்திய பெரிய கண்களையுடைய பெண்ணே! **முதலும் முடிவும் இல்லாத அரிய** பெரிய ஒளிவடிவமாம் இறைவனை **யாங்கள் பாடித்துதிக்க.** அதனைக் கேளாதவர் போல இன்னும் **துயிலுகின்றாயே, உன்செவி** செவிடாகி விட்டதோ, எல்லாம்வல்ல **முழுமுதற் பொருளாகிய** சிவபெருமான் திருவடிகளைப் புகழ்ந்து **பாடிய வாழ்த்து ஒலிபோய்,** தெருவில் கேட்டலும் தேம்பித் தேம்பி **அழுது ஒருபெண் தன்னை** மறந்து மலர்ப் படுக்கையினின்றும் புரண்டு **வீழ்ந்து ஒன்றும் செய்யமுடியாமல்** இப்படிக்கிடந்தாள் எங்கள் **தோழியே இதுவே உன் தன்மை,** வியப்பு, வியப்பு! நாங்கள் வழி **படுதற்குரிய பாவையே** என்று கூறினள்.

**(வி-ம்)** ஏல், ஓர்,—அசை; விம்முதல்—தேம்பியழுதல். 'என்னே என்னே' என நங்கையின் தன்மையை இழிவு படுத்தினர் நங்கை ஆழ்ந்து உணர்ச்சியற்று நித்திரை செய்யும்போது வீதியிடத்திருந்து வரும் வாழ்த்து ஒலியைக் கேட்டு, நான் உங்களை முன்தினம் வந்து நித்திரையால் எழுப்புவேன் என்று சபதம் கூறினவளாதலின் ஏங்கி விம்மி உருண்டு கீழே கிடந்தனள் என்க. எனவே இப்பாடலில் நித்திரையின் இழிவும் எழுப்புவோர் ஆற்றுமையும் உணரமுடிகின்றது துயில் எழுப்பி நீராடிப் பாவை நோன்பு நோற்கும் சான்றோர் வழக்கும் கூறப்பெறுதலுமாம்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ(து) எப்போ(து) இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசன்ஆர்க்(கு) அன்பார்யாம் ஆர்ஏல்ஓர் எம்பாவாய். (2)

(பொ-ரை) இரவும் பகலும் நாம் பேசிக்கொண்டிருக்கும் பொழுதெல்லாம் நீ என்னுடைய பக்தி முழுவதும் ஒளிவடிவுடைய இறைவனுக்கே உரியது என்பாய். அதுவுமன்றி இந்த மலர்ப்படுக்கையினிடத்துப் பற்றினை எப்போது வைத்துக் கொண்டாயோ கூறுவாயாக. (தன்னை இகழ்தலைக் கேட்ட நங்கை தோழிமாரைப் பார்த்து) அழகிய ஆபரணங்களை யணிந்த நங்கையீர்! உங்கள் வாயில் பழிப்புச் சொல்லும் உண்டோ. விளையாடி இகழுமிடம் இதுவா. (என்று எழுந்த பெண்கூற, வந்த தோழிமார் சொல்லுகின்றார்கள்) மெய்யன்பற்ற தேவரும் தாம் வழிபடக் கூச்சமடையும் மலர் போன்ற திருவடிகளை நமக்குத் தந்தருள எழுந்தருளி வரும் தலைவனும், சிவலோகத்தில் உள்ளவனும், தில்லைக்கூத்தனும் ஆகிய இறைவனுக்குச் செய்யும் அன்பு எப்படியானது. யாம் எத்தகையேம்.

(வி—ம்) 'இராப்பகல்' என்பதில் இராவை முற்கூறியது; இளைப்பாறும் இரவிலும் பத்தி வைத்திருத்தலைக் குறிப்பதற்கு 'நேரிழையாய' என்பதில் பெண்கள் அணிந்து கொண்ட ஆபரணங்கள் அழகுடையனவேயல்லாமல்,அவற்றிற் கேற்ற நல்ல குணங்களைக் கொண்டிலர் என்பதை அறிவுறுத்தும். தேவர்கள் பிறப்பை விரும்பி இறைவன் திருவடியை வழிபடக் கூச்சப்படுகின்றனர். ஆனால் இறைவன் தானாகவே அடியவரின் விருப்பத்துக்கே திருவடியைச் சூட்டியருளுகின்றான். தேசன்-ஒளிவடிவினன்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதி ரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். (3)

(பொ-ரை) முத்துப் போன்ற வெண்மையான பற்களையுடைய பெண்ணே! நீ எங்களுக்கு முன்னே விழித்தெழுந்து வந்து, சிவன் எனக்குத் தந்தை, இன்பவடிவானவன், அழிவில்லாதவன் என்று வாயூறிப் பேசுவாய். இப்பொழுது எழுந்துவந்து நின் வாயிற் கதவைத் திறக்குதி; (என்று இகழுவதைக் கேட்ட பெண் தோழிமாரை நோக்கி) பேரன்புடையவர்களே இறைவனுக்கு அடியவர்களே தோழமையுடையீர்களே, புதிய அடிமைகளான எங்கள் குற்றத்தை நீக்கி ஆட்கொண்டால் பொல்லாத செயலாகுமோ? (அது கேட்டு எழுப்பியவள் கூறுவது) நின் அன்புடைமை வஞ்சகமுடையதோ? உன்னுடைய செய்கைகளை நாங்கள் அறியமாட்டோமோ? பத்திமனமுடையவர் சிவபெருமானைப் புகழ்ந்துபாடாதிருப்பார்களோ? எங்களுக்கு இவ்வளவும் வேண்டப்படுவனவாகும்.

(வி—ம்) 'முத்தன்ன வெண்ணகையாய்' என்பதில் நித்திரையை விட்டு எழுப்பவும் எழாததினால் கோபத்தை உள்ளடக்கிச் சிரிப்புத் தோன்றுதலுமாம். 'சித்தம் அழகியார் ... சிவனே' என்றது கோபத்தினது திறமையைப் புலப்படுத்தியது. 'இத்தனையும் வேண்டும்' என்றது உன்னைத் தோழமை உரிமையில் கூறியவற்றைப் பொறுத்தாயல்லை என்றதைப் புலப்படுத்தியது. ஆனந்தன்—இன்பவடிவினன், இறைவனுடைய திருவடி இன்பம் உயிர்களுக்கு உரிமையானது. அமுதன்—அழியாதவன்; பத்து—பத்தி.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேதவிழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். (4)

(பொ-ரை) ஒளி பொருந்திய முத்துப்போன்ற பற்களையுடையவளே! இன்னும் பொழுது விடிய வில்லையா? (அதுகேட்ட பெண்) அழகிய கிளி போலப் பேசுகின்ற பெண்கள் எல்லாரும் வந்துவிட்டனரோ? (எழுப்ப வந்த தோழி சொல்லுவது) நாங்கள் எண்ணிப் பார்த்து உள்ளபடி சொல்லுவோம். அவ்வளவு நேரமும் நித்திரை செய்து வீண்காலம் போக்காதே, தேவர்களுக்கு அமிர்தம் போன்றவரும், ஆகமங்களின் சிறந்த பொருளாகவுள்ளவரும், கண்ணுக்

கினியவனுமாகிய சிவனைப் புகழ்ந்துபாடி உள்ளம் நெக்கு உருகு வாயாக. நீயே நித்திரை விட்டெழுந்துவந்து கணக்கிட்டுச் சொல்லு; குறைந்தால் மறுபடியும் போய்த் துயிலுதி எம்பாவையே.

(வி-ம்) 'ஒண்ணித் திலநகையாய்' என்றது ஒருவரோடு ஒருவர் பேசுவதைக் கண்டபோதே மற்றவர்க்கு நகை தோன்றுதலால் அந்த நகைதோன்றிய முகத்தினளை அழைத்ததாகவும் கொள்ளலாம். 'எண்ணிக் குறையில் துயில்' என்பது எங்கள் உள்ளம் இறைவனை வழிபடுதலின் எண்ணுதல் மாட்டுச் செல்கின்றிலது. நீயோ அத்தகையை யல்லை. எனவே எண்ணவும் வல்லுனை ஆவாய். ஆதலால் இங்கே வந்து, வந்தாரை எண்ணிக் கணக்கிட்டுக் கொள். கணக்குப் பார்த்துக் குறைந்தால் திரும்பவும் சென்று துயிலுதி என்முள் என்க. துயிலு என்பதற்கு வருந்தித் துயில் எழுந்தவள் திரும்பத் துயிலுவதற்கு மனம் பொருந்தி இயையாள் என்பதுமாட

மாலறியா நான்முகனும் காணு மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலமிடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். (5)

(பொ-ரை) திருமால் அறியாத திருவடியையும், பிரமன் அறியாத திருமுடியையும் உடைய மலைபோலும் பேரொளி மயமாய் நின்ற இறைவனை, நாம் அறிவோம் என்றுரைத்த பொய்களைப் பேசும், பாலோடு சுரக்கின்ற தேன்போன்ற சொற்களை வெளிப்படுத்தும் வஞ்சகியே, கடவைத் திறப்பாயாக; மண்ணுலகத்தாராலும், விண்ணுலகத்தாராலும், பிற உலகத்தாராலும் அறியமுடியாத கரிய தன்மையுடைய திருக்கோலமும், நம்மை அடிமை கொண்டு பெருமைப் படுத்தும் அருட்குணத்தையும் புகழ்ந்துபாடி, சிவனே சிவனே என்று ஓலமிட்டுக் கூறியும், அறிந்தாயில்லை, மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடைய உனது தன்மை எத்தன்மையது?

(வி-ம்) செல்வச் செருக்குள்ள திருமாலும் கல்விச் செருக்குள்ள பிரமனும் யான் எனதென்னும் தன்மை

யுடையவர். இறைவன் பேரொளிப் பெருமலையாகத் தோன்றியபோது முறையே அடியையும் முடியையும் இவர்களால் காணமுடியவில்லை. இவர்கள் ஆன்ம தத்துவமாகிய இருபத்துநான்காவதாகிய குணதத்துவத்தில் உள்ள உயிர்கள். ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலக் கட்டுப்பாடுடையவர்கள், அதனால் சகலர் எனப்படுவர். பால் கரவின்மையும் தேன் இனிமையும் பயப்பதால் ''பாலூறு தேன்'' எனப்பட்டது. பாலின்கண் ஊறும் தேன் எனினும் அமையும். இறைவன் திருக்கோலம் கொள்ளுதல் உயிர்கள் உய்யும் பொருட்டேயாகும். படிறு என்பது வஞ்சகம், அது கேட்டற்கினிமை பயந்து இன்சொல் எனப்படாதது. இப்பொழுது கதவு திறவாமையாற் காணப்பட்டது என்க.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றே
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். (6)

(பொ-ரை) மான்போன்ற விழியையுடையவளே!-நேற்று நீ-நாளைக்கு நானே உங்களை வந்து துயில் எழுப்புவேனென்று சொல்லிப் போய் விட்டாய். சென்ற திசையைச் சொல்வாயாக. இன்னமும் பொழுது விடியவில்லையே. விண்ணவர், மண்ணவர், பிற உலகோர் ஆகிய எவராலும் அறியமுடியாத இறைவன் வலியவந்து ஆட்கொண்டருளுதற்குரிய நீண்ட வீரக்கழல் அணிந்த திருவடியைப் புகழ்ந்துபாடிய எமக்கு; நின்வாயைத் திறந்தாயுமில்லை; உடல் உருகினையுமில்லை, இந்த நிலை உனக்குத்தான் பொருந்தும்; எமக்கும் பிறருக்கும் தலைவராகிய சிவபிரானைப் பாடுவாயாக.

(வி-ம்) மான்—அச்சத்தால் உண்டாகும் மருண்டபார்வைக் குறிப்பு. திருவடி—என்பது திருவருளால் யான் எனது என்னும் செருக்கற்ற இடமாம். போனதிசை எது என்பதும், எங்களுக்கு விடிந்தும் உமக்குமட்டும் விடியவில்லையோ என்பதும், யாம் கூறுவது பொய்யோ என்பதும் தோன்ற 'இன்னம் புலர்ந்தின்றே' எனவும் கூறினர். ''வந்

தோர்க்குன் வாய்திறவாய்' 'ஊனே உருகாய்' 'உனக்கே உறும்' என்று பெண்கள் ஒருவருக்கொருவர் வழியிடைக் கூறிச் சென்றனரென்க. நென்னல்+ஐ - நென்னலை, ஐ சாரியை.

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
    உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
    தென்னா என்னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
    சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
    என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். (7)

(பொ-ரை) தாயே இறைவனைப் புகழ்தலும் துயிலுதலுமாகிய இத்தகையனவும் சில உண்டோ? முப்பத்துமுக்கோடி தேவர்களாலும் நினைத்தற்கரியவனும், ஒப்பற்றவனும், மிகுபுகழ் உடையானுமாகிய முதல்வனை நினைவுபடுத்தும் ஊதுகொம்பு சங்கு முதலானவை இசைக்க, அதனைக் காதிற்கேட்ட அளவிலே சிவன் என்றே சொல்லிக்கொண்டே வாயைத் திறப்பாய், தென்னவனே என்று சொல்லுமுன் தீசேர்ந்த மெழுகுபோல உருகுவாய், என்தந்தை எம்மன்னன், எனக்கு இனியன், என்று யாமனைவரும் தனித்தனியே சொன்னோம் அவற்றைக் கேட்பாயாக. இன்னும் துயிலுகின்றாயோ உருகும் நெஞ்சில்லாத அறிவிலிகள் போல சும்மா கிடக்கின்றாய், உமது நித்திரையின் தன்மை எத்தகையது?

(வி-ம்) தென்னா—தென்னாடுடைய சிவன். அன்பினர் சின்னங்கள் கேட்பச் சிவ என்று திருமுறை மொழிவர். 'தென்னா' என்பது இசை பாடுபவர் பாடத் தொடங்கும் போது எழுப்பும் ஒலிக்குறிப்பென்று கூறுவாருமுளர். அவர் தென்னா என்று ஓசை எழுப்பிய உடன் மெழுகொப்ப உருகினள் என்று பொருள் கொள்வர். அன்னே என்பது இனிய வார்த்தை கூறி விளித்து உடனழைத்துச் சென்று நீராட்டி விரதம் இருக்கச் செய்யும் அருளின் திறத்தைப் புலப்படுத்துகின்றது. 'என்னே துயிலின் பரிசு' என்பது நித்திரையின் இழிவைப் புலப்படுத்துகின்றது.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். (8)

(பொ-ரை) கோழி கூவ, காக்கை முதலிய பறவைகளும் கூவும். இசை பாடுவோர் ஏழிசையை இயம்புவர், எங்கும் வெள்ளிய சங்குகள் ஒலிக்கும். ஒப்பற்ற பேரொளி வடிவினருடைய சிறந்த திருமுறைகளைப் புகழ்ந்துபாடினோம். அதனைக் கேட்டிலைபோலும், வாழ்வாயாக, இது என்ன நித்திரை, வாயைத் திறந்து பேசாய்; பேரருட் கடலாகிய சிவபெருமானிடத்துச் செய்யும் அன்பு நெறியும் இது தானோ? பேரூழியின் தலைவனாய் நின்ற ஒப்பற்றவனை, அம்மையை இடப்பாகத்திலே கொண்டவனை இனியாவது பாடுவாயாக.

(வி—ம்) ஏழில் - ஏழ்+இல்; ஏழிடம் ஆகுபெயராய் பண் முதலியவற்றை உணர்த்தியது. வைகறையில் இசைப் பயிற்சி செய்வோரைக் கேட்டு சங்கு இசைத்தனர் என்க. ஆழியான் — அருட்பெருங்கடல்; இதனை அன்புடையவர் பருகுவர். ஆழியான்—திருமால் எனக் கொள்ளின் அவன் சிவனிடத்துச் செய்யும் அன்பும் இப்படித்தானோ எனலுமாம். இளமைப் பருவப் பெண்களையும் தாய்மார் பாவை நோன்பிற் பழக்குவதற்காக விடியற்காலையில் துயில் எழுப்பி நீராடச்செய்து வழிபடுவித்து வாழ்வுறச் செய்தனர்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய். (9)

(பொ-ரை) முற்பட்ட பழையனவாகிய பொருள்களுக்கெல்லாம் அங்ஙனமே முற்பட்ட பழைய பொருளானவனே, பிற்பட்ட புதுப் பொருள்களுக்கும் அங்ஙனமே புதுப் பொருளாக உள்ளவனே, இத் தகைய உன்னைத் தலைவனாகப் பெற்ற அடியவராகிய நாங்கள், உனக் கடியவர்களாகிய அவர்கள் திருவடிகளை வணங்குவோம்; அப்படியே அவருக்கு உரிமையுடையவராவோம். அவ்வடியவர்களே எங்களுக்குக் கணவராவார். அவர்கள் உவந்து சொல்லிய இயல்பிலே விருப்பங் கொண்டு பணியாக ஏற்று ஏவல்செய்வோம், எங்கள் பெருமானே! எங்களுக்கு அருள்புரிவீரேயானால் எத்தகைய குறைபாடும் இல்லாத வராவோம்.

(வி-ம்) முன்னைப் பழம் பொருள் என்றமையால் முதற் பொருள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது. அது கண்ணுக்குத் தெரியாத அருவ நிலையாகும். அதாவது சிவம், சத்தி, நாதம், விந்து ஆகிய நான்கு மெய்களும் அருவத்திருமேனியாகும். இந்நிலையில் இறைவன் உயிர் களுக்கு அறிவையும் ஆற்றலையும் விளக்குவிப்பன். கணவர்— கண் போன்றவர். திருவடி வாழ்வைக் கண்போன்று வழி நடத்துபவர். பெண்கள் தங்கள் கணவன்மாரைத் திருவரு ளால் தெய்வமாக்குந் தன்மையுடையவர். எனவே பெண் கள் கற்பு நெறிக்கண் நின்று சங்கற்பஞ் செய்து கணவரைத் தலைக்கூடி, வாழ்க்கையை நடத்தி வந்தனர் என்பது பெற்றும். 'உகந்து சொன்னபரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்' என்றமையால் கணவர் விரும்பிய வெல்லாம் தாம் விரும்பியதாகவும், விரும்பாதன தாமும் விரும் பாதனவாகவும் கொண்டு நோற்று கற்பினை மேற்கொண் டனர் என்க.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
    போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
    வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
    கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
    ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். (10)

(பொ-ரை) சிவபெருமானின் திருக்கோவிலிலுள்ள குற்றமற்ற நன்மை பொருந்திய திருக்கூட்டத்தினராகிய பெண்களே! இறைவன்

**திருவடிமலர், கீழ் ஏழு உலகினுக்கும் அப்பாற்பட்டதாகச் சொல்லுக்கு அடங்காத தன்மையுடையது, மலரணிந்த திருமுடியும் எல்லாப் பொருள்களுக்கும் முடிந்த முடிபாயுள்ளது. அர்த்த நாரீஸ்வரத்திரு மேனி ஒன்றுமட்டும் உடையவரல்லர்; வேதத்தை முதலாகக் கொண்டு விண்ணவரும் மண்ணுலகத்தவரும் ஆகிய எல்லோரும் புகழ்ந்து பாடினும், புகழ்ச்சியைக் கடந்த ஒப்பற்ற தோழனாக உள்ளான் தனது அடியவர்க்கு; அவன் ஊர் யாது? அவன் பேர் யாது? அவன் சுற்றத்தவர் யார்? அயலவர் யார்? அவனைப் புகழ்ந்துபாடும் இயல்பு யாது?**

(வி—ம்) சோதிப் பிழம்பான அருவுருவ நிலையாகும். பிரமனும் மாலும் முடியையும் அடியையும் தேடிய குறிப்பினைக் கொண்டது. திருவடியோ சொல்லுதற்கு அணுகாததாய் பாதாளம் ஏழினும் கீழாய்ப் பெருகிச் செல்லும் உலகங்கள் எல்லாம் பொருந்தாததாக விரிந்துள்ளது. திருமுடியோ அவற்றுள் படாததாய் அப்பாலாகி உள்ளது. எனவே திருவடியாய் விரிந்தும், திருமுடியாய் தானே தானாய் மூலமும் முடிவுமாவான் என்பதாம். எல்லாம் கடந்தவன் ஆனாலும் தொண்டருக்குத் தோழன் சுந்தரர் போல யோக நெறியினர் அவர் திருவுருப்பெறுவர். ஒரு பொருளை விளங்கிக் கொள்வதற்கு. அதற்குரிய இடம், அதற்கேற்ற பெயர், அதற்கேற்ற இயல்புகள் அதற்கேற்ற தன்மை எல்லாவற்றையும் அறியவேண்டும். அங்ஙனம் அறிய வினவியதற்குக் காரணம் இறைவன் திருமுடி, திருவடி, திருமேனி ஏனைய இயல்புகள் அறிதற் கருமையாலும்; அவன் இயல்புகள் கேட்டுத் தம்முள்ளம் பற்றி நிற்பதற்குமாகும். அடியவர் இறைவன் தன்மை அறிவாராதலின் அவரை வினவினள் என்க. 'அரன்தன் கோவில் பிணாப்பிள்ளைகாள்'' என்றது வீடுபேற்று உணர்வு நிறைந்து இறைவன்பால் உடனமர்ந்து இன்பம் நுகர்ந்த அன்பர்கள் இறைவன் மண்ணுலகில் திருக்கோயில் கொள்ளுதலால் அவருடன் பிரிவற்ற தாமும் ஆண்டுச் சென்று அவனையே தம் தலைமகனாகக் கொண்டு அன்பு செய்து வழிபடுகின்றவரையே என்க.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யா வெண்ணீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். (11)

(பொ-ரை) வண்டுகள் நிறைந்த அகன்ற நீர்நிலையுள் புகுந்து கையால் 'முகேர்' என்னும் ஒலி உண்டாகும்படி முழுகி முழுகி உன் திருவடிகளைப் புகழ்ந்துபாடி எம்மிறைவனே வழிவழி அடிமைகளாகி யாம் வாழ்வு பெற்றோம், நிறைந்த நெருப்புப் போன்ற செந்நிறத் திருமேனியனே! வெண்மையான திருநீற்றைப் பூசியவனே! பேரின்பப் பெருந்திருவுடையவனே! சிறிய இடையையும் பெரிய மை தீட்டப் பெற்ற கண்களையுமுடைய உமாதேவியின் கணவரே! ஐயனே! உயிர்களை அடிமை கொண்டருளும் திருவிளையாட்டினால் உய்தி எய்தும் அன்பர்கள் உறுதிப்பயன் எய்தும்வகை எல்லாம் யாங்களும் பெற்று ஈடேறிவிட்டோம். இனிமேலும் யாங்கள் களைத்து வருந்தாதபடி காத்தருள்வாயாக.

(வி-ம்) மொய், மலருமாம் சூரியன் உதிக்க மலருதலைக் குறிக்கும். குடைதல்—மூழ்குதல். ஆர்அழல்—செம்மை நிறம். விளையாட்டு;—உடல் வருத்தமில்லாமல் நினைத்த மாத்திரத்திலே எளிதிற் செய்தல். இறைவனுக்கு வழியடிமைப்பட்டு வந்தமையால் மார்கழி நீராடவும் அவரைப் புகழ்ந்து பாடவும் உடையோமானோம். அதுவுமன்றி உமது அடியவரைக் கணவராகவும் பெற்று வாழ்ந்தோம் என்றார் என்க. தலைவனாய், செம்மேனியனாய், மணவாளனாய் முன்வந்து எங்களை மெய்மறக்கச் செய்து மெய் அன்பராக்கி தம் அடியார்க்கு அன்பு செயச் செய்வித்தவர் என்பதை, ''ஐயா, செய்யா, செல்வா'' முதலியவற்றால் புலப்படுத்தினார் என்க.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். (12)

(பொ-ரை) எம்முடன் தொடர்புள்ள பிறவித் துன்பமானது கெட்டொழியுமாறு மகிழ்ச்சியால் ஆரவாரித்து முழுகும் தூய நீரையுடையவனும், சிறப்புடைய தில்லைக்கண்ணுள்ள ஞானமாகிய வெளியில் தீ ஏந்தி நடனம் புரிகின்ற கூத்தனும், இந்த நிலவுலகத்தையும் அந்த வானுலகத்தையும் நம் எல்லோரையும் தோற்றுவித்தும் நிலைபெறச் செய்தும் ஒடுக்கியும் விளையாடுபவனுமாகிய சிவபெருமானது பொருள் சேர் புகழைப் பாடிக்கொண்டு, கைவளையல்கள் ஒலிக்கவும், நீண்ட மேகலை முதலிய அணிகள் ஆரவாரம் செய்யவும், அழகிய கூந்தலின் மேல் வண்டுகள் எழுந்து முழங்கவும், மலர்கள் விளங்கும் நீர் நிலையில் நீராடி எம்மை அடிமையாக உடைய இறைவனது பொன் போன்ற திருவடிகளைப் பாராட்டி அதன்பின் சுனையின் கண்ணுள்ள நீரிலே முழுகுவோமாக.

(வி-ம்) ஆர்தல்—கட்டுதல். ஆர்த்து—ஆரவாரம், ஆடுதல்—இறைவனுடைய அளவற்ற குணக் கடலினுள்ளே மனம் அழுத்தப் பெறுதல், மெய் அடியார்களை இன்பக் கடலில் அழுத்தி வைத்தற்காகவே சிதம்பரத்திலே நின்று காட்சிகொடுத்து நடித்தும் அந்த நடனக் கூத்தினாலே விண் மண் முதலியவற்றைப் படைத்தும் காத்தும் கரந்தும் உயிர்கட்குப் பிறவிப் பிணி போக்கியும் வருதலை ஒரு விளையாட்டாகவும் உடையவன் என்பதை தீர்த்தன் கூத்தன் முதலியவற்றாற் புலப்படுத்தியவாறாயிற்று. முதலில் பொய்கையிலும் பின்னர் சுனைநீரிலும் தீர்த்தமாடுதல் மரபு. பொய்கை—மானுடராக்காத நீர்நிலை. முத்தொழிலும் ஆவிகள் பற்றி நிகழ்வனவாதலின் அறியாது ஆசைப்பட்டு விரும்புகின்ற அயன் அரி. அரனுக்கு அருளினன் இறைவன். மலநீக்கம்போக பிறவிக் கடலுள் மூழ்குதலும் வினை நீக்கம் பெற அருள்நோக்கத் தீர்த்த நீராடலும் குறிப்புப் பொருளாகும்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (13)

(பொ-ரை) பசிய கருங்குவளை மலராலும், அழகிய செந்தாமரை மலராலும், அழகிய நீர்வாழ் பறவைகளை யுடைமையாலும், பின்னி எழும் அலைகளை யுடைமையாலும், தங்கள் தங்கள் அழுக்குகளைப் போக்குவோர் வந்து அடைதலினாலும், எங்கள் இறைவியையும் எங்கள் இறைவனையும் ஒத்து விளங்குகின்ற நீர் நிறைந்த பொய்கையில் பாய்ந்து பாய்ந்து முழுகுதலால் கன்னிப் பெண்களின் கைவளையல்களுடன் காலில் அணிந்த சிலம்புகள் மாறுபட்டு ஒலிக்கவும், மார்புகள் குலுங்கவும் முழுகும் நீர் மேலெழவும் தாமரைப் பூக்கள் சிறந்து விளங்கும் பொய்கையிற் குதித்து நீராடுவோமாக.

(வி—ம்) இத்திருப்பாடலில் அம்மையப்பரின் உருவகத் தோற்றம் குறிக்கப்பட்டுள்ளது. அம்மையாருக்கு உவமை:- குவளைக்கார் மலரால் நீலநிறமும், அங்கங்குருகு இனம் என்பவற்றால் கைவளையல்களும் குறிப்பனவாகும். அப்பனுக்கு உவமை:— செங்கமலப் போதால் தீ வண்ணமும், பின்னும் அரவத்தால் விரும்பிக்கொள்ளும் ஆபரணங்களும் குறிப்பனவாகும். பொதுத்தன்மை:— மலங்கழுவுவார் சார்தல். இறைவற் குள்ளனவெல்லாம் இறைவிக்கும், இறைவிக்குள்ளனவெல்லாம் இறைவற்கும் உள என்றலுமாம். சங்கம்—கைவளையல். கார்மலர்—கண் ஒப்பாதலையும், செங்கமலம் — நெஞ்சொப்பாதலையும், குருகினம் — தீண்டுதலுக்கொப்பாதலையும், அரவம்—ஒலியாகிய உபதேசத்துக்கு ஒப்பாதலையும் குறிக்கும். கார்மலர், கமலம், குருகினம், அரவம் என்னும் பொருட் குறிப்பு முறையே காண்டல், கருதல், தீண்டல், உபதேசம் ஆகிய நான்கு தீட்சை முறையையும் புலப்படுத்தின.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். (14)

(பொ-ரை) காதில் அணிந்த, தோடு அசைய, உடம்பிலணிந்த பொன்னாலாகிய மற்றைய அணிகலன்களும் ஆட, தலையிற்சூடிய மாலை அசைய, வண்டுக்கூட்டங்கள் அசையக் குளிர்ந்த நீரிலே முழுகித் தில்லைச் சிற்றம்பலவனைப் புகழ்ந்துபாடி, மறைநூலின் உட்பொருளைப் பாடி, மறைப்பொருளாம் இறைவனைப் பாடி, சோதியாகி நிற்கும் பெரு மானைப் பரடி, சென்னியிலணிந்த கொன்றை மலர்மாலையைப் பாடி, எப்பொருளுக்கும் முதலும் முடிவுமாகவுள்ள அவன் தன்மை யைப் பாடி, நம்மை மலங்களினின்றும் வேறுபடுத்தி வளர்த்து மேம்படச்செய்த அருட்சத்தியின் திருவடி இயல்பைப்பாடி நீராடுவோ மாக.

(வி—ம்) வேதத்துள் இறைவன் சோதிமயமாய் விளங் குவன் என்க. சிதம்பரத்தின் சிதாகாயத்தில் நின்று வேத மும் அதனினின்று மெய்யுணர்வும், அம்மெய்யுணர்வில் இறைவன் வெளிப்பாடும் அந்தத் தோற்றமே சோதிவடி வும், அந்தச் சோதிவடிவில் வீடுபேற்றுக்குரிய திருவடியின் செம்மையும் புலனாகும். அவையனைத்தையும் பெற்று உய் யும் பொருட்டுத் திருவருள் பாலிப்பது அருட் சத்தி என்க. ஆணவ மலப்பிணிப்பில் கட்டுண்ட உயிர்களை மாயையி னின்றும் படைத்தருளித் தனு. கரண. புவன, போகங்களைக் கொடுத்து வினைப்பயனை அனுபவிக்குமாறு அருளுதல் என் பதை விளக்க 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய் வளை' என்றார். முதல்வனை சிறப்பியல்பால் உணரும் மெய்யுணர்வு தோன்றுங்காறும் அவனது பெருங்கருணை உயிர்கள் மாட்டு ஒருங்கே நிகழாதவண்ணம் உயிர்க்குற்ற மாகிய அம் மலசத்தியின் வழிநின்று அவற்றை நடத்துவ தாகிய அவனது சங்கற்பமேயன்றிப் பிறிதில்லை என்பது பெறப்படுதலின் அங்ஙனம் நடத்துவதாகிய முதல்வனது சங்கற்பமே ஈண்டு மறைப்பெனப்படும். மறைப்பு - திரோ தான சக்தி எனப்படும். (சிவஞான போதம் 25 உரை)

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (15)

(பொ-ரை) கச்சுக்கட்டிய ஆபரணம் அணிந்த மார்பையுடையீர், இடையிடையே எம்பெருமான் என்று சிவபெருமானுடைய சிறப்புகளை வாய் ஓயாது சொல்லுவாள், உள்ளக்களிப்பால் கண்களினின்று இன்பக் கண்ணீர் இடைவிடாது சொரிய, நிலத்திலே விழுந்து வணங்குகின்ற தன்மையுடையவள். தேவரைக் குறித்துக் கனவிலும் வணங்க மாட்டாள். பெருவேந்தனாகிய சிவபெருமான் பொருட்டு ஒருவர் பித்துடையவளாய் இருத்தல் இவ்வாறே இம்முறையில் இவளை ஆட்கொள்ளவல்ல வித்தகர் ஒருவர் யார்? அவருடைய திருவடிகளை நாம் வாயாரப் பாடிச் சிறந்து தோன்றும் பூக்கள் நிறைந்த நீருள் முழுகுவோமாக.

(வி-ம்) ஒரு காலத்து ஓரிடத்து மனம், வாக்கு, காயம் ஆகிய முப்பொறிகளும் ஒருங்கியைந்து இன்புறுந் தன்மை 'வாயோவாள்' 'சித்தங்களிகூர' 'வந்தனையாள்' என்பவற்றால் பெறப்படுகின்றது. வாயோவாது இறைவனின் புகழைப் பாடும்போது இடையிடையே ஒவ்வொரு முறையும் மெய்ம்மறந்து எம்பெருமான் என்று கூறுவாள் என்க. தன்னை நோக்கினவருக்கு இனிய காட்சியளித்து தன்னில் முழுக வைக்கும் தன்மையுடையது அந்நீர் என்பது தோன்ற 'ஏருருவப் பூம்புனல்' என்றார்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். (16)

(பொ-ரை) முகிலே! நீ இக்கடல் நீரைச் சார்ந்து அது குறையும் படி நீரை முகந்து மலைமேலேறிப் பின் விண்ணிலெழுந்து எம்மை ஆண்டருளும் அருட்சத்தியின் திருமேனிபோல நீலநிறம் பெற்று விளங்கி எம்மை ஆட்கொள்ளும் உடையவளின் சிற்றிடைபோன்று மின்னுதலைச் செய்து பொலிவுபெற்று; எங்கள் திருவருட் சத்தியின் திருவடியின் கண்ணுள்ள பொன்னலாகிய அழகிய சிலம்புபோல ஒலித்து, அவளுடைய அழகிய திருப்புருவம்போல வானவில் விளங்கச் செய்து, எம்மையடிமையாகவுடைய அருட்சத்தியின் பிரிவில்லாத எம்பெருமானுடைய அடியவர்களுக்கும் அம்மை நமக்கு முன்னம் சுரக்கின்ற இனிய அருள்போல மழையே பொழிவாயாக.

(வி—ம்) மார்கழி மாதத்து விடியற்காலையில் பெய்யும் மழை நீராடலின் பலன் நாடுசெழிக்க மழை வேண்டுதல். இது ''மழையே பொழியாய்'' என்பதனுல் பெறப்படும். மார்கழி நீராடினல், நீராடுபவர்களை அடியவர்க்குரியவராக்கும். கற்புடை மகளிர் நீராடுகையில் தமது கற்பின் திறத்தினல் உலகின்மேல் அருள்கொண்டு 'மழையே பொழியாய்' எனக் கட்டளையிட்டாள். இதுவே, ''கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை'', 'வீழ்கதண்புனல்' என்பதன் பொருளாகும். மழையும் கற்புடை மகளிரை ஏவல் கேட்கும் என்பதாம். இறைவனுடன் இறைவி வேறுபாடில்லாதவள் என்பதை அறிவுறுத்த 'உடையாள்' எனப்பட்டாள். ஆன்மாக்களுக்கு சிவஞானம் வரச்செய்து சிவத்தோடு கலப்பித்தலால் 'எம்பிராட்டி' எனவும் கூறினர்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புலனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். (17)

(பொ-ரை) மணம் பொருந்திய கூந்தலையுடைய பெண்ணே! சிவந்த கண்களையுடைய திருமாலிடத்தும் திசைக்கொன்ருக நான்கு முகங்களையுடைய பிரமாவிடத்தும், வானவர்களிடத்தும், மற்றெல்லா

விடத்திலுள்ளவர்களிடத்தும் இல்லாத ஒப்பற்ற பேரின்பம் எங்களுக்குத் தந்தருளி தம்மைச் சீராட்டி இவ்வுலகத்து எங்களுடைய வீடுகள் தோறும் எழுந்தருளி செந்தாமரை மலர்போன்ற அழகிய திருவடிகளை எமக்குந் தந்தருளும் தொண்டினையுடையவனும், அருள் நோக்கமுடையவனுமாகிய இறைவனை அடிமைகளாகிய எங்களுக்கு இடைத்தற்கரிய அமுதமாக உள்ளவனை, நன்மை விளங்குமாறு புகழ்ந்துபாடி அழகிய தாமரைமலர் சிறந்து விளங்கும் நீர்த்துறையிலே குதித்து முழுகுவோமாக.

(வி—ம்) இறைவனை அன்பினலன்றி மற்றெவற்ருலும் பெறற்கரியது, அன்பின் ஐந்திணை ஒழுக்கம் ஒழுகுவார். சுற்றத்தவரோடு சென்று தவஞ்செய்து வீட்டு நெறியையடைவர். ஐம்புலன்களை யடக்கி தவயோகஞ் செய்து உடலை நீத்துப் பெறும் இன்பத்திலும் கன்னிமை கழியாத இளம் பெண்கள் மார்கழி மாதத்து விடியற்காலையில் நீராடிப் பாவை நோன்பில் நோற்பவர்கள் பெறும் இன்பம் பெரிது என்க. இது 'எங்கும் இலாத இன்பம்' ஆகும். தேவர்களுக்கு இறைவன் அருளுவது சிற்றின்பம் கன்னியர்களுக்கருளுவது பேரின்பம். இதனுலேதான் தேவர்களும் நிலத்திலே வந்து பிறக்க விரும்புகின்றனர். வானுலக வாழ்வு நிலையில்லா வாழ்வெனக் கருதுகின்றனர் தேவர்கள் என்க.

அண்ணு மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணேர் முடியின் மணித்தொகைவீ றற்ருற்போல்
கண்ணுர் இரவி கதர்வந்து கார்கரப்பத்
தண்ணர் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணுகி ஆணுய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணுகி மண்ணுகி இத்தனையும் வேருகிக்
கண்ணு ரமுதமுமாய் நின்ருன் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.(18)

(பொ-ரை) திருவண்ணுமலையில் பேரொளியாய் எழுந்தருளியிருக்கும் இறைவனுடைய திருவடியை வணங்கும் தேவர்களின் முடிமணிகள் பொலிவிழந்து மழுங்கினுற்போல, இருள் நீங்கச் சூரிய ஒளி வெளிப்படாமுன்னர் நட்சத்திரங்களின் ஒளி மழுங்கி மறைய, பெண்ணுகியும், ஆணுகியும், அலியாகியும், இம்மூன்றற்கும் இடமாகிய வானுகியும், மண்ணுலகமாகியும் இவையனைத்தும் ஒன்ருவதுபோல, தன்மையால் வேறு பொருளாகியும் காணும் கண்ணுக்கு அமுத

வடிவமாகியும் நிலைபெற்ற சிவபெருமானது திருவடிகளைப் புகழ்ந்து பாடி பொலிவுபெற்ற இந்நீர் நிலையிற்குதித்து முழுதுவோமாக.

(வி—ம்) 'அண்ணுமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்' என்பதில் அண்ணுமலை விதந்து கூறப்பட்டமையால் திருவெம்பாவை அண்ணுமலையில் இயற்றியருளப் பட்டதென எண்ணுவதற்கிடமுண்டு. ஆண், பெண், அலி என அத்துவிதப் புணர்ப்புக் குறிக்கப்பெற்றது. சூரியன் ஒளிக்குமுன் இருள் மறைவதுபோல சிவஞானம் தோன்ற மலவிருள் அகலும். சூரியன் ஒளியில் நட்சத்திரங்களின் ஒளி அடங்குவதுபோல இறையறிவில் உயிர் அழுந்தியறியும்—சித்தாந்தக் குறிப்பு இந்த உவமையினுல் திருவடிப் பேற்றிற்குப் பலகாலம் பழகிய ஆன்மாக்களுக்கு இறைவன் குருவடிவமாக எழுந்தருளிவந்து அனுக்கிரகம் செய்ய சிவஞானம் தோற்றும். அதனுல் மலம் நீங்கி அதிதீவிரதம் அடைந்த உயிர் திருவடியில் அடங்கிப் பேரின்பமடையும் என்க.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்ருென்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய். (19)

(பொ-ரை) எங்கள் பெருமானே உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலப் பொருளாகும் என்று திருமணக் காலத்தில் வழங்கி வரும் பழமொழியைப் புதுப்பிக்கும் வாயிலாக எழுந்த நடுக்கம் காரணமாக, உனக்கு ஒரு விண்ணப்பம் சொல்லுவோம் கேட்டருள் வாயாக. எங்கள் கொங்கைகள் நின்னுடைய அன்பரல்லாதவர்களின் தோள்களைத் தழுவாதொழிக. எம்கைகள் நினக்கன்றி வேறு எவர்க்கும் எத்தகைய தொண்டும் செய்யாதொழிக. எம்முடைய கண்கள் இரவும் பகலும் நின்னைக் காணுதலன்றி வேருென்றையும் காணுதொழிக. இவ்வுலகத்தில் பிறந்த எங்களுக்கு இவ்வியல்பினை நீ அருள் செய்வீராஞல் சூரியன் கிழக்குத் திசையல்லாமல் எந்தத் திக்கில் உதயம் செய்தாலும் வரக்கூடிய தென்ன? (ஒன்றுமில்லை)

(வி—ம்) ''உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்'' என்பது பழமொழி திருமணக் காலத்தில் பெற்றோர் மருமகனுக்குத் தாரைவார்த்துத் தத்தம் பண்ணிக் கூறுதல் மரபுபற்றி வருதலின் பழமொழியாயிற்று. மணம் நிகழாத கன்னியர் இறைவனைக் குறித்துத் தாம் வேண்டுதலின் பழமொழியின் இயல்பைப் புதுக்கிய அச்சத்தால் என உரைக்குக. மணமக்கள் இருவரும் திருவடி வாழ்வு வாழ்வதற்குரியவர். அதற்குச் செல்லும் வழி இல்வாழ்க்கை; அந்நெறிக்குத் துணை ஒருவருக்கொருவர் ஆவர். அடியவரல்லாதார்க்குத் தொழிற்படவும் அவரால் பற்றப்படவும் விடாது எங்களைப் பாதுகாப்பின், எங்கள் உள்ளமும் நின்னையும் நின் அடியாரையும் பற்றி இன்புறும் என்றார் என்க.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
　　போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயி க்குந் தோற்றமாம பொற்பாதம்
　　போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறும் இணையடிகள்
　　போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
　　போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். (௨0)

(பொ-ரை) இறைவனே, நின் திருவடிகள் எப்பொருள்களுக்கும் முதலாக உள்ளன. ஆதலின் அவற்றைக் காத்தருள்வாயாக. அவ்வாறே செந்நிறத் தளிரனைய நின் திருவடிகள் எல்லாவற்றிற்கும் முடிவாகவுள்ளன. ஆதலின் அவற்றை நீ காத்தருள்வாயாக, எவ்வுயிரும் பிறப்பதற்கு இடமான நின்திருவடிகள் எம்மைக் காத்கருள்க, எவ்வுயிர்க்கும் இம்மை மறுமை நுகர்வு அருளும் நின் திருவடிகள் எம்மைக் காத்தருள்க, எவ்வுயிர்களுக்கும் ஒடுக்கத்திற்குக் காரணமாய் அமைந்து இணைந்த திருவடிகள் எம்மைக் காத்தருள்க; அரியும் அயனும் அறிய முடியாத திருவடிகள் எம்மைக் காத்தருள்க, யாமெல்லாம் உய்யும் பொருட்டு அடிமைகொண்டருளும் பொன்போன்ற திருவடிகள் எம்மைக் காத்தருள்க, பிறவிப்பயனை நுகர்வதற்குக் காரணமாயமைந்த மார்கழிநீர் எம்மைக் காத்தருள்க.

(வி—ம்) எல்லா உயிர்களும் தோன்றுவதற்கும், தோன்றி வினைப் பயன்களை நுகருவதற்கும் இறுதியாக ஒடுக்கத்துக்குக் காரணமாய் நின்று திருக்கூத்தருளுது

திருவடிகளாதலின் ''ஆதியாம், அந்தமாம், ஈறும்'', திருவடிகள் என்றுரைத்தனர். அத்திருவடிகளை நீயும் போற்றுக, யாமும் போற்றுவோம் என்பதாம். மாலும் நான்முகனும் ஆணவ மிகுதியுடையராதலின் திருவடிக் காட்சி எய்தாமையின் மறைக்கப்பட்டவராவர். இறைவன் எல்லாம்வல்ல முழுமுதற் பொருள் ஐந்தொழிற்குமுரிய வன். எண்வகைப் போற்றியும் இறைவனின் எண்வகைக் குணங்களை நினைவுறுத்துவன. திருவடி வணக்கம் இம்மை யில் ஐந்திணை இன்பத்தையும், மறுமையில் வீட்டின்பத்தை யும் பெற்று உய்தி பெறத் தந்தருளும் என்க.

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்

# திருவம்மானை

'அம்மானை' என்பது இசைப்பாட்டுடன் அம்மானை யாடுதல். இது பெண்கள் ஆடும் ஆடல்களில் ஒன்றாகும். அம்மானை ஆடுவார் தமக்கு நல்ல கணவர் வேண்டுமென்று, அக்கணவரின் சிறப்புக்களை விதந்தெடுத்து வரிப்பாட்டாக ஆடுவர். அம்முறை போன்று திருவடியின்பப் பேற்று இயல்பில் ஆன்மா ஆண்டவன் திருவடிகளைப் பேணும் முறையினால் பெண்தன்மையாகவும், அவ்வான்மாக்களை ஆட்கொள்ளும் சிவபெருமான் ஆண் தன்மையாகவும் தொழுகின்றனர். அத்தன்மையேயல்லாமல் ஆன்மாவாகிய அடிமைக்கேனும், எல்லாம்வல்ல ஆண்டவனுக்கேனும் ஆண் பெண் வடிவமில்லை.

'அம்மானை' என்னுஞ்சொல் விளிவேற்றுமை (எட்டாவது) ஏற்றற்கு ஐயீறுகெட்டு ஆய்ஈறு பெற்று 'அம்மானாய்' என நிற்கின்றது. திருவம்மானை என்ற முதற் பெயரே ஒவ்வொரு பாடலின் முடிவிலும் விளங்குகின்றது. இதுபோலவே 'எம்பாவாய்' 'சாழல்' என்னும் முடிவுகளும் அமைந்தன.

அம்மானைவரி, வள்ளைப்பாட்டு முதலியவை பாடி ஆடப்பெற்றுள்ளன என்பதைச் சிலப்பதிகாரத்தாலும், கலித்தொகையாலும், பெருங்கதையாலும் நன்கு விளங்கும்.

சிலப்பதிகாரத்தின்கண் வரும் அம்மானைப் பாட்டு,

> "அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்
> தம்மனை யிற்பாடுந் தகையேலோ ரம்மானை
> தம்மனை யிற்பாடுந் தகையெலாந் தார்வேந்தன்
> கொம்மை வரிமுலைமேற் கூடவே யம்மானை
> கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்தன்
> அம்மென் புகார்நகரம் பாடேலோ ரம்மானை.

(சிலப். வாழ. அம். 4)

# திருவம்மானை

திருச்சிற்றம்பலம்

செங்கண் நெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். (1)

(பொ-ரை) செந்தாமரை மலர்போலும் அழகிய கண்களையுடைய நெடிய திருமாலும் நிலத்தைத் தோண்டிச் சென்றும் கண்டு கொள்வதற்கரியதாகிய மேலெழுந்து பொலியும் மலர்போன்ற திருவடி நிலத்தே தோயவந்தருளி, வழிவழி அடிமை செய்யும் எங்களது பிறப்பையும் அறுத்தொழித்து, எங்களுடைய தொண்டின் தகுதிக்கேற்ப ஆண்டு அடிமை கொண்டருளி, தென்னைமரங்கள் மிகுந்த இனிய சோலைகளாற் சூழப்பட்ட திருப்பெருந் துறைக்கண் எழுந்தருளியவன், தென்னாடுடையசிவன், தண்ணளியுடையவன். வலிய வந்தழைத்துத் தன் திருவடிப் பேறாகிய வீட்டினை அளித்தருளும் கருணையும், நீண்டகழலுமணிந்த திருவடியினைப் புகழ்ந்துபாடி அம்மானை ஆடுவோமாக.

(வி—ம்) நெடுமால் தேவருட் சிறந்தவன் செருக்கால் சிவபெருமானை (தீப்பிழம்பை) தேடமுயன்றான். பன்றியுருவெடுத்து நிலத்தைக் குடைந்து காணமுடியாது திரும்பினன். வார்கழல்—அன்மொழி. அறைகூவுதல்—வலிய அழைத்தல். அம்மானை ஆடும் பெண்கள், பெருந்துறையான், தென்னவன், அந்தணன் என்று சிவபெருமான் திருப்பெயர்களையே பாடியாடுவர். இறைவன் வலிய வந்தாட்கொள்ளுவதற்குக் காரணம் அவன் அருளுடைமையே என்பது தோன்ற 'அங்கணன்' என்று கூறினள். அம்மானைப் பாடலை அம்மானாய் என வேட்கை மிகுதியால் விளித்தனர் என்ப.

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய்; (2)

(பொ-ரை) நிலவுலகத்தாரும் வானுலகத்தாரும் கீழ் உலகத்தாரும் வேறுவேறாகவுள்ள புற உலகத்தாரும் ஆகிய எவர்களாலும் அன்பின்றிக் காணுவதற்கு அரிய முழுமுதற் பொருளாவான். ஆனால் பேரன்புபூண்டு அடியவர்களாக எங்களுக்கு மிகவும் எளியவன்; பெருமை மிக்கவன்; தென்னாடு உடையவன் திருப்பெருந்துறையுடையவனுமாகிய சிவன். அடியேங்களைக் காதல்கொள்ளும்படி செய்தருளிப் பிறவி எடுக்காது தடுத்து அடியேன் உள்ளம் புகுந்தருளினன். அமிழ்தாய் நிலைத்தருளினன், அலைவீசும் கடலிடத்து வலைவீசி மீனைப் பிடித்தருளினன்; அடியேங்களுடைய பேரன்பே உருவாக உள்ளவனைப் பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி—ம்) சிவபெருமான் உமாதேவியார் நந்தியம் பெருமான் என்னுமிவர்கள் செய்த குற்றத்தை நீக்கி அனுக்கிரகம் செய்தவாறே தம்மையும் காத்தருளுவர் என்றபடி. வலைஞர் குலத்திலே அவதரித்த உமையம்மையாரை மணந்து அருள்பாலித்தவாறே தம்மையும் ஆட்கொண்டருளுவார் என்பது குறிப்பு. தானிட்ட சாபத்தைத் தானே நீக்கியருளுவர் என்பதுமாம். இறைவனுக்கு விருப்பமான செயல் அழுது ஆடிப்பாடும் அன்பேயாகும்.

இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம்பரியப் பரிமேற் கொண்டான் தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய். (3)

(பொ-ரை) வானவர் கோனாகிய இந்திரனும், திருமாலும், நான்முகனும் ஏனைய முனிவர் முதலியோரும், மற்றைய தேவர்களும் ஒருங்குகூடி, அந்தரமாகிய விண்ணுலகத்திலே ஏக்கமுற்று நிற்க, சிவபெருமான் தென்னாட்டிடை எழுந்தருளி வந்து எங்கள் தகுதிக்கேற்றவாறு ஆட்கொண்டருளி, திருத்தோளிலணிந்த திருநீற்றுப் பொலிவுடன் எங்கள் உள்ளத்தை உருக்கியருளும் சிறப்புடைய திருப்பெருந்துறைக்குரியவன் பாண்டியன் முதலியோரது பாசக்கட்டு நீங்கக் குதிரை ராவுத்தராகிக் காட்சி நல்கி, அவர்களுக்குக் கொடுத்தருளிய பேரின்பத்தைப் பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி—ம்) இந்திரன் முதலியோர் வானுலகில் இன்பம் பெறாதிருக்க பூமியில் வந்து அடியார்களுக்கு ஆனந்த மூட்டினன் சிவன் என்க. திருப்பெருந்துறையில் குதிரைமீது

எழுந்தருளிவந்து பாண்டிநாடு வாழும்படி செய்தருளினன் என்பதாம். பந்தம்—பாசம். பரிய—அற, குதிரைமேல் எழுந்தருளிவந்த திருக்கோலம் அடிகளார் பொருட்டும் என்பர்.

வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்டு
ஊன்வந்து ரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய். (4)

(பொ-ரை) வானுலகத்து வாழும் தேவர்களும், திருமாலும், நான்முகனும், இந்திரன் முதலியோர்களும் (தாம் அருள்பெறவேண்டி சிவபெருமானை நோக்கித் தவம்செய்ய நிலவுலகத்தில் வந்து) வனத்திலே புகுந்து உண்ணாவிரதமாய் உடல்வற்றியும் தம்மை மறந்து நெடுந்தவம் செய்தபடியால் புற்றுமூடியும் தருணம் கிடையாதபடியால் சிவபெருமானைக் காணமுடியாதவராயும் நின்றனர். அவர்களாற் காண்டற்கரிய சிவன் வலிய இந்நிலவுலகத்துவந்து அடியேமாகிய எங்களுக்குத் தாயைப் போன்று பேரன்புசெய்து உடம்பிலுள்ள உரோமம் சிலிர்க்க உணர்வினுள் உயிர்ப்பாய் நின்று, தேன் போலவும், அமிழ்து போலவும், அவற்றின் தெளிவாகவும் அறிவுப் பேரொளியாய் வந்தருளிய நீண்ட கழல்களையுடைய திருவடிகளைப்பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி—ம்) வானுலகத்திலுள்ள தேவர்களும் அரும்பயன் பெறவேண்டி மண்ணுலகத்தேவந்து தவம்புரிவர். தவம் புரிந்து வருந்தியும் இறைவனைக் காணற்கு அரியவராயினர். பெண்களுக்கு அன்புமேலீட்டினல் ஆட்கொண்டருளும் பெருமையுடையவன் என்பது போதரும்-ஊன்-ஆகுபெயர். தவம் ஒன்றே கடவுளை அடைதற்குரிய நல்வழியாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் நான்கும் 'இறப்பில் தவம்' என்பர் ஞானியர்.

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லைநகர் புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய். (5)

(பொ-ரை) கற்றறியா மனத்தையுடைய நாயினும் கடைப்பட்ட என்னை, வல்லவனாய், தென்னாட்டுச் சிவனாய், திருப்பெருந் துறையனாய் எழுந்தருளிவந்து பெருங்காதல் கொள்ளச் செய்து, கல்லினும் கடிய மனத்தை கசியச்செய்து கனியாக்குவித்து தனது ஆனந்தப் பெரு வெள்ளத்தில் அழுத்துவித்து, எனது வினைமாசு தீர்த்து ஆட்கொண்ட அந்தணனை, அறிவு வெளியாகிய தில்லைச் சிற்றம்பலத்தே நிலை பெற்றருளும் இறைவனை அறமாகிய இடபத்தில் ஊர்ந்துசெல்லும் இடபாரூடரை இடையீடின்றிப்பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி—ம்) தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பான் அடியவரையும் ஒன்றறக் கலக்கச் செய்தவர் திருப்பெருந் துறையான். ஆதலின் அவரையே விதந்துகூறினர். நெஞ்சம் தணிவுற்றார் ஆனந்த வெள்ளத்துள் அழுந்துவார் என்பதாம். அன்பில்லாதாரைத் துன்புறுத்துவாராதலின் 'வல்லாளன்' என்றார்.

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண் டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய். (6)

(பொ-ரை) தோழியே! முழுமுதல் ஒருவன் என்பொருட்டுச் செய்த மாயச் செயல்களைக் கேட்பாயாக; ஓவியச் சிறப்புக்களையுடைய மதில்களாற் சூழப்பட்ட தென்னாடுடைய சிவன், திருப்பெருந் துறையில் அந்தணனாகி எழுந்தருளியவன். யான் காணுதற்கரிய உண்மைப் பொருள்களை எல்லாம் அகக்கண்ணாற் காணச்செய்து அவற்றினூடு தம்மையும் காண்பித்து, திருவடித்தாமரையைக் காண்பித்து, அருட்டேனைக் காண்பித்து, நமது நிலையைக் கண்டு ஊரவர் சிரிக்கவும் எமது திருவருட் பேற்றினால் அப்பாலுள்ள மோட்சத்தை (திருவடிப்பேறு) அடையும்படி ஆட்கொண்ட நம் சிவனைப்பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி—ம்) இறைவன் உண்மைத் தோற்றத்தைக் காட்டினனேனும், அவற்றை அனுபவிக்கும் பக்குவநிலை இன்மையால், அவை தமக்கு மாயச்செயல்களாயின என்க. கிறி—மாயம். அது காட்டி மறைக்கப்படுவது. உலகியல் நெறியில் செல்பவர் வீட்டு நெறியிற் செல்பவரைப் பார்த்து நகை செய்தனர் என்னலுமாம். இறைவன் கோலம்

முதலியவற்றைக் காட்டித் திருவடிப் பேறெய்தச் செய்தனன் என்க. சிவஞான நாட்டம் பெற்றவர்கள்தான் தனக்குள் சிவத்தைக் காண்பர் என்பதாம்.

ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை யாள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய். (7)

(பொ-ரை) இடைவிடாது நினைப்பவரது உள்ளத்தில் உயிர்க்குயிராய் உணர்வுக்குணர்வாய் இருக்கும் இறைவன் அன்பரல்லாதவர்க்கு தூரத்திலிருப்பவனை, அடியவர்க்கெளியனாகிய தொண்டனை, தென்பாண்டி நாட்டானை திருப்பெருந்துறையானை. முற்றறிவுடையானை, அர்த்தநாரீசுவரனை, நாயாகிய நம்மை அடிமையாகக் கொண்ட தலைவனை, தாய்போலப் பாதுகாப்பவனை, ஏழுலகம் முழுதும் ஏகனாய் நிற்பவனை. அனைத்துலகையும் ஆருயிரையும் அருளாட்சி செய்பவனைப் பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி-ம்) மாதிருக்கும் பாதியன் தாயான தத்துவன் திருப்பெருந்துறையில் வேதியனாய் (குரு) நம்மையாண்டான். அவன் இடையறாது நினைப்பவர்க்கு அணியனாயும், நினையாதார்க்கு வெளிப்படாது சேயனாயும் நிற்பர் என்பதாம். இறைவனை உலகமாகிய உடைமைக்குரியவன் என்பது தோன்ற உடையான் எனவும், உயிராகிய அடிமைக்குரியவன் என்பது தோன்ற ஆண்டான் எனவும் வழங்குவர்.

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய். (8)

(பொ-ரை) பண்ணோடு கூடிய பாடல்களை மெய்யடியார் வாயிலாகப் பாடுவித்து அதனையே பரிசாக ஏற்றுக் கொண்டருளுபவரும், அர்த்தநாரீசுவரரும், எல்லார்க்கும் மேலானவரும், திருப்பெருந்துறையில எழுந்தருளியவரும், விண்ணளாவிய புகழுடையவரும், எல்லாவுலகங்களுக்கும் மேலான சிவலோகங்களை ஆள்பவரும், நெற்றிக்

கண்ணையுடையவரும், மதுரையிலுள்ள வந்திக்குக் கூலியாளராகி பிட்டுக்கு மண்சுமந்து நதிக்கரையில் பாண்டியனால் அடிபட்டு அதனால் புண்பட்ட திருமேனியை யுடையவருமாகிய சிவபெருமானைப்பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி-ம்) இறைவன் மண் சுமந்தமைக்காகப் பண் சுமந்த பாடலைப் பரிசாகப் பெற்றவன். பெண் ஒரு கூறுகிய கண்ணுக்கினியகாட்சி நல்குதல் உலகியல் நடத்தல் பொருட்டு என்க. புகழை விண் சுமத்தலால் முழுமுதல் எனப்படுவன். அவன் உலகினுக்கு உயிருமாகியும் உலக மாயும் நிற்பதை யார்தான் அறிவார். திருவாசகம் இயற் றமிழேயன்றி இசைத்தமிழுமாம் என்பதை அறிவுறுத்த 'பண்சுமந்தபாடல்' என்றார் என்க.

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுத லாயினன் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய். (9)

(பொ-ரை) ஒரு பிறையாகிய இளஞ் சந்திரனைத் திருச்சடையில் வைத்தருளியவன், மறைகளை வெளிப்படுத்தியவன், திருப்பெருந்துறை அந்தணன், முப்புரிநூலை மார்பில் அணிந்தவன், அழகிய இடபத்தை ஊர்பவன், திருநீலகண்டத்தவன், செந்நிறத் திருமேனியன், திரு வெண்ணீற்றுப் பொலிவினன். அண்டங்களெல்லாவற்றுக்கும் முழுமுத லானவன், அடியார்களுக்குப் பேரின்பத்தைப் பழைய முறைப்படி வழங்கியவன், அதனை மற்றைய அண்டங்களிலுள்ளவர் வியக்குமாறும் செய்பவன் அத்தகையோனைப் பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி-ம்) அண்டத்துக்கு முதல்வன், கோலமாவூர்தியன், செம்மேனியனாய் வெண்ணீறணிந்து அந்தணனாய்ப் பெருந் துறையில் வந்தருளினான் என்க. அவன் பழ அடியார் களுக்கு இன்பம் கொடுத்துதவினவன். ஆதலின் இன்பத் தையே பாடினர் என்பதாம். சிறுமையுடையோர்க்குப் பேரின்பம் யாங்ஙனம் எய்திற்றென்று அண்டத்துள்ளார் வியந்தனர் என்க. அண்டம் — ஆகுபெயர். ''கோலமா வூர்தியான்'' விடை மேலேறி தில்லையுட் சென்று சிதா

காசத்தில் கண்டங்கரியனாய் பிறையணிந்தவனாய் அண்ட முதல்வனாய் திருக்கூத்தாடி பேரானந்தத்தை வழங்குகின் றான் என்னலுமாம்.

விண்ணாளுந் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்: (10)

(பொ-ரை) விண்ணுலகத்துள்ள தேவர்களுக்கும் எட்டாத மேன்மைமிக்க உண்மையறிவினையுடையவனை, மண்ணுலகத்தைக் கட வுள் அருளால் முறைசெய்து செங்கோல் நடத்தும் அரசர்க்கு மாண்பாக நினைத்தவனை, அகப்பொருள் இலக்கண இலக்கியங்கள் நிரம்பிய தண் தமிழை ஆக்கிய பாண்டி நாட்டானை, அகப்பொருளுக்கு இலக்கியமாக உமையம்மையை வாம பாகத்தில் பொருந்தி உலகியலை நடாத்து பவனை, திருப்பெருந்துறையில் அந்தணனாய், எழுந்தருளிக் கண்ணுக் கினிய திருவடி காட்டி நாயேனை, ஆண்டுகொண்டவனை, அது போலத் திருவண்ணாமலையிலும் அடிமைகொண்டவனைப் பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி—ம்) அறம், பொருள், இன்பத்தினால் வீடடைதல் நூற்பயன். அன்பின் ஐந்திணை (அகப்பொருள்) உள்ளுறை யாக அமைந்தது திருவடிப்பேறு ஆகும். அதுபற்றி மணி வாசகரும் திருச்சிற்றம்பலக் கோவையை ஓதியருளினார். மண்ணாளும் மன்னவர் அன்பின் ஐந்திணையை உலகத்திலே காத்துவருதற்கு அவன் இலக்கியமாக நின்றமைவான் என்க. தமிழ் அளித்த நாடு 'தண்பாண்டி நாடு' எனப் பட்டது. தண்ணார் தமிழாகிய அகப்பொருளின் முடிவே வேத முடிவாகிய திருவடி என்பது புலப்படும். அண்ணா மலையானை என்னும் குறிப்பு இத்திருப்பதிகம் அண்ணா மலைக்கண் பாடியருளியதை நினைவுபடுத்துவதாகும்.

செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய். (11)

(பொ-ரை) சிமிழை ஒத்த முலையினையுடைய அருளம்மையை இடப்பாகத்தே யுடையவன். தென்பாண்டிநாட்டவன், திருப்பெருந் துறையான், திருவடியடைந்தவர் உள்ளத்தைத் தப்பாது உருக்குவிக்கும் இயல்பினையுடையவன், தொன்மையுடைய பாண்டிநாட்டைச் சிவலோகமாகச் செய்வித்த கங்கையணிந்த சடையையுடைய சடையப்பனுவன், நீண்ட கழலணிந்த பேரின்பத் திருவடிக்கே தம் முள்ளத்தை ஈடாக ஒப்புவித்த அடியார் உள்ளத்தின்கண் உள்நின்று உணர்த்துபவனை, அப்பாலைக்கப்பாலான அம்பலவாணனைப் பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி-ம்) பங்கன் தென்னவன் சடையப்பனுமாகிய சிவபெருமானுடைய வீரக்கழல் தரித்த திருக்கூத்தயரும் திருவம்பலமாகும் என்பர். அப்பாண்டிநாடு—பழமையும் பெருமையும் பொருந்தியது. அந்த நாட்டைச் சிவலோக மாக்குவித்தவன் ஆவன். அப்பாலை—அப்பால் உள்ள தலைவன். ஐ—தலைவன், செப்பு—சிமிழ்; அப்பாலை—என்பது திரு அம்பலமுமாகும்.

மைப்பொலியுங் கண்ணிகேள் மாலயனோ டிந்திர னும்
எப்பிறவியுந் தேட என்னையுந்தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நஞ்சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய். (12)

(பொ-ரை) மை தீட்டப்பெற்று விளங்கும் கண்களையுடைய பெண்ணே, கேட்பாயாக, திருமால் பிரமன் இந்திரன் முதலியோர் செருக்குடைமையால் எல்லாப் பிறவிகளிலும் சிவனைத் தேடியலைகின்றனர். (அவர்களைப் பொருட்படுத்தாமல்) ஒன்றற்கும் தகுதியற்ற என்னை தனது இனிய திருவருளால் இப்பிறவியின் கண்ணே அந்தணனாகி ஆண்டுகொண்டனன் இனிப் பிறவாது காத்தருளினன். மெய்ப் பொருள்களின் தோற்றமாய் நின்றனன், மெய்மையே நிலைபேறாக வுடையவன். எப்பொருட்கும் சார்பாகவுள்ளவன். எப்பொருள்களும் நிலைபெற்று உய்வதற்கு நிலைக்களமாக உள்ளவன். அந்தப் பொருளாகி நமக்குரியவனைப் பாடி அம்மானை ஆடுவோமாக.

(வி-ம்) மெய்ப்பொருள்—அழிவில்லாத ஆருயிர் வினை மாயைகளுமாம், மலம் வீடுபேறடையவிடாது உயிர்களோடு ஒட்டி நிற்கும் தன்மையது. வினைமாயை தோன்றி ஒடுங்குவனவேனும் அழிவுள்ளனவல்ல. இறைவன் திருமால் முதலி

யோர்க்குப் பிறந்தவிடத்தும் பிறவாதவிடத்தும் காணப் பெறுதவன் அத்தகையோனே வலியவந்து ஆட்கொண்டு இனிப்பிறவா வகை காத்தனன் என்க.

கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய். (13)

(பொ-ரை) நம்முடைய கைகளில் அணிந்த வளையல்கள் ஒலிக்கவும், காதிலணிந்துள்ள தோடுகள் அசையவும், மயிர்ச்சாந்தணிந்து சுருட்டிமுடிந்த கொண்டை உருளவும், அதிலுள்ள மலர்களிலிருந்து தேன் பாயவும், தேனை உண்ணும் வண்டுகள் ஆரவாரிக்கவும், செம் மேனியுடையவனும், திருநீற்றினையணிந்தவனும், தாம் எவரையும் வணங்கும் பொருட்டு குவித்தறியாத திருக்கைகளையுடையவனும், எவ்விடமும் நீக்கமற நிறைந்திருப்பவனும், அடியவர்க்கு மெய்யாக விளங்கும் தன்மையனும், அன்பில்லாதவர்க்கு மறைந்திருக்கும் தன்மையனும் திருவையாற்றின்கண் வீற்றிருக்கும் தன்மையனுமாகிய சிவனை நாம்பாடி அம்மானை ஆடுவோம்.

(வி—ம்) பிறவாயாக்கைப் பெரியோனுதலின் அவரால் வணங்கப்படுபவர். யாண்டும் எவருமிலர் என்பதனையறி வுறுத்த ''சேர்ந்தறியாக் கையான்'' என்றுர். கண்ணிருந் தும் திருவருள் கூடப் பெருமையால் அன்பில்லாதவர் ஆண்டவனைக் காணுத குருடராவர். மெய்யன்பர் திருவருள் நாட்டத்தினுல் அகக்கண் திறக்கப்பெற்ற முற்றறிவுடைய வராவர். சேர்தல்—குவிதல்.

ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையும் ஒத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பிற்
கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய். (14)

(பொ-ரை) யானையாகியும், புழுவாகியும், மக்கட் பிறவியாகியும் வானவராகியும், மற்றைய பிறவிகளாகியும் இருவினைக்கீடாகப் பிறந்

தும் இறந்தும் இளைத்தும் போன என்னை, திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலின்கண் அந்தணனாய் எழுந்தருளி ஆட்கொண்டு, உள்ளத்தை உருக்கி உடலை உருகச்செய்து சஞ்சிதவினையை நீக்குவித்து, தேனும்பாலும் சர்க்கரையும் நிகர்த்த இன்சுவையையருளி, காதற் பெருந்தலைவனாய் எதிர்வந்து தமது திருவடித்தொண்டினுக்கு ஏற்றுக்கொண்டு அருள்செய்த தேவனுடைய வீரக்கழலணிந்த திருவடியைப் பாடி அம்மானை ஆடுவோம்.

(வி—ம்) சஞ்சிதம், பிராரர்த்தம், ஆகாமியம் என வினை மூன்று வகைப்படும். பிராரர்த்தம்—உடலுடனழியும். சஞ்சிதம்—இறைவன் திருக்கண்ணோக்கால் ஒழியும், ஆகாமியம்—திருவருள் முனைப்பற்றுச் செய்தலால் அவ்வுயிரின் தொடர்பு விட்டுநீங்கும். நீங்கத் திருவருட்செயலாக முடியும் என்பதாம். இறைவனின் வீரச்செயல் விளங்கக் கூறப்பட்டமையால் அவன்கழல் பூங்கழலாயிற்று. கீடம்-புழு. பிறவு—பிறவி, தனக்குக் கணவனும் தெய்வமும் அவ்வொருத்தனே தான் என்பாள் ''கோனவன்போல் வானவன்'' என்றாள் என்க.

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட் டெச்சன் தலையரிந்து
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய். (15)

(பொ-ரை) தக்கனானவன் சிவனைமறந்து பெருவேள்வி செய்யத் தொடங்கினன். அவ்வேள்விக்குத் தேவர்கள் சென்றிருந்தனர். சிவபெருமான் கட்டளைப்படி வேள்வியிற் கூடியிருந்தவர்களை வீரபத்திரர் தண்டித்தார்; அவர்களிற் சிலர் இப்பாடலிற் கூறப்படுகின்றனர்; சந்திரன் உடல்தேய்ந்தான்; இந்திரன் தோள் நெரிக்கப்பட்டான், எச்சன் தலையரியப்பட்டான், சூரியன் பல் தகர்க்கப்பட்டான்; ஏனைத் தேவர்களும் ஒறுக்கப்பட்டுத் திக்குகளில் ஓடுவராயினர், பூங்கொத்துக்கள் நிறைந்த சோலைகளாற் சூழப்பட்ட திருப்பெருந்துறையில் எழுந்தருளிய அந்தணனாகிய தென்னாடுடைய சிவனுக்குரிய மந்தார மாலையைப்பாடி அம்மானை ஆடுவோம்.

(வி—ம்) சிவனை முதலாகக் கொண்டு செய்யும் வேள்வி கொலையும் புலாலும் இல்லாத நலனுறு வேள்வி. ஏனையுயிரினத் தேவர்களைக் கொண்டு செய்யும் வேள்வி கொலை

யும் புலாலும் நிரம்பிய வேள்வியாகும் என்க. சார்பில் லாத சந்திரன் முதலியோரையும் சார்பாக உள்ள தம்மை யும் ஒருங்கே துன்பம் செய்வோன் என அவனது கொடுமை கூறப்பட்டது என்க.

வீரபத்திரக் கடவுள் தக்கன் யாகசாலையுட் புகுந்து தாக்குதலும், சந்திரன் ஓடுவதைக் கண்டு தமது ஒரு திரு வடியினால் மெல்லென்று உதைத்தருளுதலும், உடல் சின் னம் உறும்படி தேய்ந்தான் என்பதைக் கச்சியப்பர் பின் வருமாறு கூறுகின்றார்.

இன்னதோர் காலையில் இரிந்து போவதோர்
மெய்ந் நிறைமதியினை வீரன் காணுறாத்
தன்னொரு பதங்கொடே தள்ளிமெல்லெனச்
சின்னம துறவுட றேய்த்திட் டானரோ.

(கந். யாகசங்காரப்படலம்; 24)

ஊனாய் உயிராய் உணர்வாயென் னுட்கலந்து
தேனாய் அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்குங்
கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய். (16)

(பொ-ரை) ஆருயிர்களின் உடலாகியும், உயிராகியும், உயிருக்கு உயிராகிய உணர்வாயும் நிற்பன்; அதுபோல என் அகத்துள்ளும் உட்புகுந்து தேனும் பாலும் வெல்லககட்டியும் போல இனிமை செய்தான். அவன் செருக்குடைய தேவர்களும் அறியப்படாத அன்பு நெறியினைத் தநதருளி தேன்சொரியும் கொன்றைமலர் மாலை யணிந் துள்ள காவலனாரின் பேரொளி பொருந்திய குறைவிலா அறிவால் அளவிடற்கரிய பல உயிர்களுக்கும் முழுமுதல்வனாய் விளங்குகின்ற தன்மையைப் பாடி அம்மானை ஆடுவோம்.

(வி—ம்) ஊன் உயிர் உணர்வு என்பன ஒன்றினொன்று மிக நுண்மையவாய் இறைவனுக்கு முறையே இருக்கையாக வுள்ளன. ஊன்—ஆகுபெயர், உடம்பு—கரும்பு, தேன்—உணர்வு, அமிர்தம்—உயிர், அறிவானது உயிரிலிருந்து மனம் புலன் என்பவற்றிலும் பரவுமியல்பிற்று; சேவகன்—காவ லன், ஆனா அறிவு—நீங்காத அறிவு. இறைவன் நல்லறிவும்

நல்லின்பமும் தான்படைத்து அவற்றை அடியவர்களுக்கும் அருளும் இயல்பினன் என்க. ஒவ்வோர் உயிரையும் தலைவனாக நின்று இன்பமூட்டி ஆட்கொள்ளுதலை 'பல்லுயிர்க் கும்கோன்' என்றாள் என்க.

சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன் கூடிமுயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்
தேடுவேன் தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்தும் மலர்வேன் அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய். (17)

(பொ-ரை) பொலிவுடைய கொன்றைமலர் மாலையைத் தலையிற் சூடிக்கொள்வேன்; அம்மாலையைச்சூடி அவனது திரண்ட திருத் தோளிணையினை ஆரத் தழுவுவேன்; தழுவிச் செயலற்று மயங்கி நிற்பேன். நின்று ஊடுதலைச் செய்வேன். பின்னர் கொவ்வைக்கனி போலும் செவ்வாய் இதழ் அமுதினுக்கு உருகுவேன். உள்ளுருகி ஆற்றாமைமிக்குத் தேடுவேன். தேடிச் சிவன்திருவடியிணையினை இடையறாறு சிந்திப்பேன்; அதன்பின் காலக்கழிவிற்கு வாடுவேன் வாடி அருளினால் மீண்டும் அகமும் புறமும் பெருமகிழ்ச்சியடைவேன். அங்ஙனமே திருவருள்புரிந்து ஒடுக்கத்தின் அடையாளமாகிய தீயினை திருக்கையிலேந்தி கூத்தியற்றும் நடராசன் திருவடியிணையினைப்பாடி அம்மானை ஆடுவோம்.

(வி—ம்) ஆருயிர்கள் — தலைவியாகவும், ஆண்டவன் தலைவனாகவும் உருவகிக்கப்படுவர். இறைவனது திருவடியி லணிந்த மாலையை அன்பர் தம்முடைய முடிக்குச் சூடிக் கொள்ளுதலை 'அணிதில்லைச் சிவனடிக்குத் தாரணிகொன் றையன்' என்ற திருக்கோவைப் பாட்டின் தொடரினாலு மறியலாகும் என்க. திருவருட்டுணையாற்கூடி மாறாமகிழ் வினில் திளைத்தல் மலர்வேன் என்பதால் பெறப்படும். ஆருயிர் நன்னெறிப்படும் பொருட்டே இங்ஙனம் நிகழ் விப்பது திருவருளேயாகும்.

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந் திருந்திரங்கி யெண்ணரிய இன்னருளால்
ஒளிவந் தெனுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய். (18)

(பொ-ரை) பைங்கிளியின் மொழியினைப்போன்ற மெல்லிய சொல்லினையுடைய ஒளிமிக்கு நிறம்விளங்கும் ஒரு பாகத்தையுடையவனை, மாலும் பிரமனும் வெளிச்சென்று காணுதற்கரிய பேரொளிப் பிழம்பாக நின்ற சதுர்ப்பாடுடையவனை, துதிப்பவர் உள்ளத்திலுள்ள உணர்வில் வெளிவந்து இனிக்கும் தேனை, சிறப்புமிக்க திருப்பெருந்துறையில் அந்தணனாய் எழுந்தருளிவந்து இன்னருளால் பேரொளி காட்டி உயிர்க்குயிராய் அறிவொளி திகழ ஆண்டருளினன், அத்தகைய ஆசானைப்பாடி அம்மானை ஆடுவோம்.

(வி—ம்) அந்தணன்—ஓதுவிக்கும் ஆசான்; ஓதுவிக்கும் உரிமை காட்டவே பூணூல் அணிதல் என்க. உள்ளத்திலுள்ள அறியாமையாகிய இருளை நீக்கி என்னுள்ளம் ஒளிதிகழ அருள்புரிந்த ஆசான் என்பதனை யறிவுறுத்த ''அந்தணன்'' என்றனள் என்க.

முன்னானை மூவர்க்கும் மூற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை
அன்னானை அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய். (19)

(பொ-ரை) மூவராகிய தேவர்க்கும் மூலப்பொருளாக முற்பட்டவனும், எல்லாவற்றையும் தோற்றுவிப்பதற்கு முன்னிருப்பது போன்று அவற்றை ஒடுக்கியும் ஒன்றுபோல நிற்கும் எல்லாப் பொருள்களுக்கும் பிற்பட்டவனும், பின்னல் சடையினை உடையவனும், சிவநெறி பாதுகாக்கப்படும் திருப்பெருந்துறை வேந்தனும், அனைவர்க்கும் திருவருள்புரியும் பெரியோனும், அர்த்தநாரீசுரனும், அழகிய திருவானைக்காவுள்ளானும், தென்பாண்டி நாட்டவனும், எமது ஆருயிருக்கு இனியவனும், என் அப்பன் என்று உள்ளங்களித்து அன்பூற அழைப்பவர்களுக்கு அமிர்தத்தை ஒத்தவனும் ஆகிய அழகிய தலைவனைப் பாடி அம்மானை ஆடுவோம்.

(வி—ம்) 'முன்னானை பின்னானை' என்பதினால் அவற்றிற்கு இடைப்பட்ட காலத்திலும் உள்ளவன் என்பதுவும், அதனால் என்றும் எங்கும் உள்ளவன் என்பதுவும் பெறப்பட்டன. இவற்றால் எல்லாப் பொருள்களும் தம்முள்ளே ஒடுங்கவும், தாம் பிறிதொன்றனுள் ஒடுங்கி விரியாது, எப்போதும் ஒரு தன்மையனாய் இருப்பர் என்பது பெறப்படுகின்றது. பிஞ்ஞகன்-பின்னல் சடையுடையவன். அம்

மான்-தலைவன். தென் திசைக்கண் பிறப்பவர் நற்றவப் பேறுடையவர், அவர்களது பிறவிப்பிணி திருவருளால் நீங்கும் தன்மையுடையது. இதனை 'தென்மாத்திசை வசை தீர்தர' என்னும் கோவைத் தொடரால் உணரலாம்.

பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றிய பேரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்; (20)

(பொ-ரை) திருவருள் இல்லாத பிறருக்கு இன்னதன்மையன் என்று அறிதற்கரியவன். திருப்பெருந்துறையில் எழுந்தருளியவன். வெற்றிச் சிறப்புடைய குதிரையின்மேல் இவர்ந்தருளிவந்து தமது அடியவருக்கு அனாதியான ஆணவ இருளையும் வினைமாயைகள் ஆகிய குற்றங்களையும், அவை சார்பாக உண்டாகும் பொல்லாங்குகளையும் முற்றும் நீக்கியருளினன். தம் எண் குணங்களையும் பதிவித்து அவர் தம்மை நல்வழிப்படுத்தி அவரைப் பிடித்துள்ள சுற்றத்தவரின் தொடர்புகளையும் விடுவித்தனன்; பாசக் கட்டுவிட்டு நீங்க அடியேம் பற்றிப் பிடிக்கும் பொருட்டு விளங்குகின்றவருமாகிய சிவபெருமானது திருவடிப் பேரின்பப் பெருவாழ்வைப் பாடி அம்மானை ஆடுவோம்.

(வி-ம்) தன்னடியார் என்பது ஈண்டு திருவாதவூரரும், செம்மனச் செல்வியும், பாண்டியனும் ஆவர் என்க. கோது-குற்றம். இறைவன் குற்றம் களைந்து குணம் பெய்து சுற்றத்தொடர்பு அறுப்பவன் என்க. இருள்சேர் இருவினையும் பொருள்சேர் புகழ்புரிந்து பற்றினரைப் பற்றா என்ப. அடியார் பெருமையை உணர்ந்தவர்கள் அவரைத் தெய்வமெனத் தொழுது அடிமைத்திறத்தில் வழுவா நெறிநின்று பேரின்பப் பெருவாழ்வு பெறுவர் என்க. சிவனடியார் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனென வழிபடுவர் என்று மெய்கண்ட தேவரும் அருளினர் என்ப.

திருச்சிற்றம்பலம்.

VATHANY